# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
# அஹமதி தமிழ் திருச்சபை

**நான்
எப்பொழுதும்
வந்தடையத்தக்கக்
கன்மலையாயிரும்;
என்னை
இரட்சிப்பதற்குக்
கட்டளையிட்டீரே;**

சங்கீதம் 71:3

செய்தி மலர்
2016
மே

இதழ் : 12
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்கட்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

தேவனுடைய பெரிதான கிருபையால் 2016ஆம் வருடத்தின் 5 ஆம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார்.

கடந்த மாதம் முழவதும் நமது குடும்ப வாழ்க்கையிலும்,சபை ஊழியங்கள், ஆராதனைகளிலும், தேவ பிரசன்னமும் வழிநடத்துதலும் இருந்தமைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த வருடம் சபையின் வாக்குத்தத்தம் "என் நாமத்தினால் நீங்கள் எதை கேட்டாலும் அதை செய்வேன்" என்பது.

தானியேல் வேண்டிக்கொள்ள தொடங்கிய போது கட்டளை வெளிப்பட்டது (தானியேல் 9:23)

மனிதர்கள் கட்டளையிடுகின்றனர்,ஆனால் அவைகள் மாறிபோய் விடுகிறது. ராஜாக்களோ, அரசாங்கமோ கட்டளையிட்டாலும் மாறி போய்விடுகிறது. அகஸ்வேரு ராஜா 127 நாடுகளுக்கு ராஜா கட்டளையிட்டார், அதுவே மாறினது. ஆனால் எல்லாவற்றையும் உண்டாக்கின தேவன் கட்டளையிட்டால், அதை மாற்ற ஒருவராலும் முடியாது.

1. நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே;(சங் 71:3)

தாவீது தேவனை நோக்கி என்னை இரட்சிப்பதற்கு கட்டளையிட்டீரே என்று சொல்கிறான். தேவன் கட்டளை கொடுத்தால் அது மாறாது என்று தாவீது அறிந்திருக்கிறார். சிங்கம்,கரடி வாயிலிருந்து இரட்சிப்பதற்கு கட்டளையிட்டதை அவன் அறிந்திருந்தான், கோலியாத் கையிலிருந்து இரட்சிப்பதற்கு கட்டளையிட்டதை அவன் அறிந்திருந்தான், இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் நம்மை இரட்சிக்கும்படி தேவன் கட்டளையிடுகிறார் என்பதை தேவ பிள்ளைகள் மறந்து போக கூடாது.

தேவமனிதர்களாகிய சாத்ராக், மேஷாக்,ஆபேத் நேகோ என்பவர்களை எரிகின்ற அக்கினி சூளையிலே போடுவதற்கு நேபுகாத் நேச்சார் என்ற ராஜா கட்டளையிட்டான் – தானி 3:20

ஆனால் அதே நேபுகாத் நேச்சார் சொல்கிறான் இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றான்.

௩ 2. இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது.(எண் 23:30)

மோவாப் ராஜா சபிக்க சொல்லி கட்டளை கொடுத்தான், ஆனால் தேவனிடமிருந்து ஆசிர்வதிக்கும்படி கட்டளை வந்தது. ஆனபடியால் ஆசீர்வதிக்க கட்டளை பெற்றான், என்று பிலேயாம் சொல்லுகிறான்.

மோவாப் ராஜா சபிக்க சொன்னபடியால், தேவன் அதை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கூடுதலான ஆசீர்வாதமாய் மாற்றிவிட்டார். தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக வரும் போது தேவன் அதை மாற்றி கூடுதலான ஆசீர்வாதமாய் மாற்றி விடுவார்

சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றி விடுவார். (உபா :23:5)

ஏசா ஆசீர்வாதத்திற்கு சுதந்திரவாளியயாய் பிறந்தவன் அவனுடைய ஆசீர்வாதம் ஏமாற்றபட்டது.

கிடைக்க வேண்டிய ஆசீர்வாதம் உனக்கு கிடையாது என்று குடும்பத்தாரே (அப்பாவே) சொல்லலாம், ஆனால் தேவன் (உபா 2:4,5) சேயீர் மலை தேசத்தை சுதந்திரமாக ஏசாவின் சந்ததிக்கு தந்தார். இப்படியாக ஏமாற்றபட்ட ஏசாவுக்கு ஒரு தேசத்தை தேவன் தந்தார், வேலையில் குடும்பத்தில், சமுதாயத்தில் ஏமாற்றபட்ட சூழ்நிலையில் இருக்கும் உனக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தை தேவன் ஏற்ற நேரத்திலே தந்து உங்களை ஆசீர்வதிக்க கட்டளையிட்டிருக்கிறார்.

பிரியமானவர்களே!"*என் நாமத்தினால் நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன்* என்று வாக்கு பண்ணியவர்" நாம் ஜெபிக்கும் போதெல்லாம், ஜெபிக்க தொடங்கிய உடனே அதற்காய் கட்டளையிடுகிறவர் நம் தேவன். ஆனபடியால் சோர்ந்து போகாமல் இயேசு என்னும் நாமத்தில் ஜெபித்து ஆசீர்வாதத்தையும், இரட்சிப்பையும், ஒவ்வொரு நாளும் பெற்று மகிழ்வோம்.

கர்த்தர் கிருபை நம்மோடிருப்பதாக!.

அவருக்கே மகிமை உண்டாவதாக !

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

# தேவ செய்தி

## இரட்டிப்பான பலன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணகர்த்தராகிய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்! வாழ்க்கையில் ஏமாற்றங்கள், ஆசீர்வாதங்களை எதிர்பார்த்த இடத்தில் இழப்புகள், நம்பினவர்கள் கைவிட்டார்கள், எதிர்பார்த்த காரியங்களில் தோல்வி, மற்றவர்களுடைய நகைப்புக்கும், நிந்தைக்கும் உள்ளாகி வெட்கமான நிலைமைக்குள் புதையுணடு அகபபட்டிருககினற நிரப்நதமான சூழநிலைகளை பிறரோடும் பகிரந்து கொளள் முடியாமல் தடுமாறி நிற்கின்ற உங்களைப் பார்த்துத் தேவன் சொல்லுகிறார். "உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய்ப் பலன் வரும் (ஏசாயா – 61:7) நம்முடைய தேவன், தம்முடைய பிள்ளைகள் வெட்கம் அனுபவிப்பதைப் பார்த்து அமைதியாய் இருக்கிறவர் அல்ல.

உங்களை வெட்கத்துக்குள்ளாக்கும் சத்துரு ஜெயம் பெறாதபடி பாதுகாத்து, வெட்கம் அனுபவிக்கிற அதே ஸ்தானத்தில் தமது இரட்டிப்பான பலனை அருளி ஆசீர்வதித்துக் கனப்படுத்துகிற தேவன்! வேதத்தில் நாம் பார்க்கும்போது யோபுவின் வாழ்வில் வெட்கத்துக்குள்ளாக்கின சிறையிருப்பின் வாழ்வைமாற்றி, இரட்டிப்பான பலனால் நிரப்பி, வெட்கத்தை அனுபவித்த அதே இடத்தில் யோபுவை தேவன் உயர்த்தினார்! (யோபு–42:10).

இதே நமம்டைய தேவன உஙகளையும எலலா இககட்டுககும், வெடகதது்ககும நீங்கலாக்கி இரட்டிப்பான பலனால் நிரப்பி உங்களை உயர்த்தும்படிக்கு 1.எக்காலத்திலும் கர்த்தரைத்துதியுங்கள். யோபு சுகமாய் வாழ்ந்திருந்த நாட்களில் ஒருநாள் யோபுவுக்கு இருந்த ஐசுவரியங்கள் முதல் பிள்ளைகள் வரைக்கும் யோபுவுக்கென்று இருந்த எல்லாம் அழிக்கப்பட்டுப் போயிற்று (யோபு 1:13–19) எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாய் தரித்திரத்தில் தள்ளப்பட்ட செய்தி வந்தபோது அந்த கொடிய இழப்பில் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"(யோபு 1:21) என்று தேவனை துதித்தார். இழப்பிலும் தேவனை துதிக்கின்ற வாழ்வில் தேவன் தமது இரட்டிப்பான ஆசரீவாததந்த தநது நமம்ம உயாத்துகிறாா். தாவதீன அனுபவததில அபிமெலேகக்கால் துரத்திவிடப்பட்ட நிரபந்தமான நிலைமை வந்த போது சொல்கிறார்.

"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர்துதி எப்போதும் என்வாயிலிருக்கும் (சங்கீதம் 34:1). எனக்கு அன்பானவர்களே! இழந்தேன் என்று கூறி வாழ்வில் சந்திக்கின்ற இழப்புகளை, அனுகூலமற்ற சூழ்நிலைகளை எண்ணி சோர்ந்து போகாமல் எல்லாவற்றிர்க்காகவும் கர்த்தரைத் துதயிங்கள். காரணம், நாம இநத் உலகதத்லி வருமபோது எதையும கொணடுவரவலில்லயே, மட்டுமல்ல நாம் போகும்போது எதையும் கொண்டுபோவதுமில்லை. ஆகையால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு கிருபையினால்

பாதுகாத்து நடத்தி வருகின்றார் அல்லவா! அதற்காக அக மகிழ்வுடன் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள், இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள், பல தீமையான

காரியங்கள் வாழ்வை நெருக்கும் போது கர்த்தரை துதிக்க! துதிக்க! உங்கள் வாழ்வை அழிக்க சோதனைகளை கொண்டு வருகிற பொல்லாத சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான் இரட்டிப்பான ஆசீர்வாதத்தின் வாசல் உங்களுக்காக திறக்கப்படுவதை கண்டு அனுபவிப்பீர்கள்! 2.பாவத்துக்கு இடம் கொடாதிருங்கள்: "இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை". (யோபு 1:22) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வில் சோதனைகளை கொண்டுவந்து தேவனுக்கு விரோதமாக பேசி பாவத்துக்கு இடம் கொடுக்கச்செயது தேவனை விடடுவிலகச் செயவதே பிசாசின தநதிரம். ஆகையால், பிசாசுகக் எதிர்த்து நின்று பரிசுத்த வாழ்வை காத்துக்கொள்ள தெளிந்த புத்தியுள்ளவர்களாக விழிப்புடன் இருங்கள் "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசாயா 59:2) தன மனைவியினால வெறுகக்ப்பட்ட நிாப்பநத்மான வேதனையின உசச்கக்டடததிலும் யோபு பாவம் செய்யாதபடி தன்னைக் காத்துக்கொண்டார். (யோபு 2:10) எந்த சூழ்நிலையிலும், வார்த்தையிலும், செய்கையிலும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடி பரிசுத்தத்திலும், உத்தமத்திலும் நிலைநிற்க அற்பணியுங்கள் வெட்கத்துக்கு பதிலாக இரண்டத்தனையான பலனை பெற்றுக்கொள்வீர்கள். 3.பிறருக்காக ஜெபியுங்கள்: "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றை பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்". (யோபு 42:10) யோபு சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தார், இவர்கள் யோபுவின் உபத்திரவத்தில் யோபுவை நித்தித்தவர்கள்(யோபு 4:5-9). எனவே தான் யோபு சொன்னார் என் சிநேகிதர் என்னை பரிகாசம் பண்ணுகிறார்கள். வேதம் சொல்லுகிறது, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். மற்றவர்களின் மீட்புக்காக தாகத்தோடும், ஆத்துமபாரத்தோடும், கிறிஸ்துவின் அன்பில் நிறைந்தவர்களாய் உங்களை அர்ப்பணியுங்கள். கட்டாயம் தேவன் உங்கள் சிறையிருப்பை, நிந்தையை, வெட்கமான நிலைமையை மாற்றி நீங்கள் வெட்கத்தை அனுபவிக்கிற அதே இடத்தில் உங்களை ஆசீர்வாதமாக மாற்றி உயர்த்தி உங்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச்செய்வார். கிருபை உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரன்

**பால் பாண்டியராஜ்**

## 2016 ஆம் வருடத்தின் சபையின் வாக்குத்தத்தம்

## என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன் ( யோவான் 14:14)

# நீங்களும் உங்கள் Teen Age மகனும்

பிரியமான சகோதர சகோதரிகளே உங்களுடைய Teen Age மகனுடன் நீங்கள் எப்படி சில நேரங்களில் முடிவு எடுப்பீர்கள் என்பதை குறித்து சின்ன பரீட்சை

1. தீர்மானம் எடுக்கும் போது A. என் மகனை அவனாக தீர்மானங்களை எடுக்க உற்சாகபடுத்துவேன் B. ஒரு சில காரியங்களிலே நானே அவனுக்காக தீர்மானிப்பேன்.C. நான் என்ன சொல்கிறேனோ அதைதான் செய்ய வேண்டும்.
2. நண்பர்களோடு. A .மகனின் நண்பர்கள் அவனோடு வந்தால் எனக்கு அறவே பிடிக்காது.B. வருவார்கள் போவார்கள்.C. அவனுடைய நண்பர்களை உற்சாகமாக உபசரிப்பேன்
3. பண விஷயத்தில். A .அவன் பணம் கேட்கும் போதெல்லாம் கொடுப்பேன். B. பணம் கொடுக்கும் பொழுது செலவைப்பற்றி தெரிந்து கொள்வேன். C. எளிமையாக வாழ உற்சாக படுத்துவென்
4. எதிர் பாலரோடு A .எப்படி பழகவேணடும் என்று கற்று கொடுததிருக்கிறேன் Bஇதெல்லாம் அவனுக்கு தெரியாதா என்ன? C. Girl friend என்பது இன்றைய நாகரீகம்.
5. அவன் பேசும் போது. A .உற்சாகமாக கேட்பேன்.B. எனக்கு அதற்கு நேரமே இல்லை.C. எப்போதாவது அப்படி கேட்ப்பேன்.
6. அவனோடு நான், A. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவனுடன் பேசுகிறேன்.B. வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவனுடன் பேசுகிறேன். C. இதை பற்றி நான் சிந்திப்பதே இல்லை.
7.குறை காணப்படும் போது, A. அவனுடைய குறைகளை யெல்லாம் கோபம் வரும் போதெல்லாம் சொல்லி காண்பிப்பேன்.B. குறைகளை மேற்கொள்ள அவனுக்கு உதவுவேன்.C. குறைகளை பெரிது படுத்தாமல் நல்ல காரியங்களை மெச்சுவேன்.
8. கோபம் வரும் போது. A. கோபத்தில் அவன் மேல் சாபத்தையிடுகிறேன் . B. கோபத்தில் சத்தம் போட்டு பின்பு அமைதியாகிவிடுவேன்.C. கோபத்தில் அவனிடம் நிதானமாக நடக்கிறேன்.
9. ஜெபிப்பதில். A. எங்கள் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்கிறோம். B. அவன் உபத்திரவம் கொடுக்கும் போது அவனுக்காக ஜெபிக்கிறோம். C. பொதுவாகத்தான் ஜெபிப்போம்.
10. ஆவிக்குறிய வாழ்க்கையில் வளர. A. கவனமாக இருக்கிறோம் . B. Sunday class க்கு போய் விடுவான்.C. Sorry இதை பற்றி மறந்தே விட்டோம்

உங்கள் யூகம் சரியா என்பதை பார்க்க அடுத்தமாதம் வரை காத்திருக்கவேண்டும்

# ஆதியாகமம் புத்தகத்தை குறித்த வரலாறும் அதின் பெயர் விளக்கமும்

எபிரேய மொழியில் ஆதியாகமம் 1:1 பெரேசித் (ஆதியிலே) என துவஙக்கிறது. இதனுடைய பொருள் தொடகக்ம். துவகக்மும் முடிவுமில்லாத இறைவனைத்தவிர மற்ற படைப்புகள் அனைத்தின் தொடக்கம் அல்லது ஆரம்பத்தை இப்புத்தகம் விளக்குவதால் இப்பெயர் பெற்றது. இதன் ஆஙகில பெயர் ஜெனிசிஸ் (புநநௌளை) கிரேகக் வாரத்தையான ஜெனசாஸ் மூலம் உருப்பெற்றது. ஆசிரியர் இப்புத்தகத்தின் குறிப்புகளிலிருந்து நான்கு விதமான பகுதிகள் அல்லது பிரிவுகள் (யெகோவா, ஏலோகிம், ஆசாரியர், உபபந்தம்) இணைதிருப்பதை காணமுடிகிறது அதாவது நானக்விதமான மூலஙக்ள் (ளுழரசஉந)

இப்புத்தகத்தை தொகுக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை சற்று ஒன்றுக்கொன்று வேறுபாடானவை. இதை அடிபப்டையாகக் கொண்டு இந்நூலின் ஆசிரியர் யார் என்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும் யூதர்களும், கிறிஸ்தவர்களும் பொதுவாக மோசே இந்நூலை தொகுத்தவர் அல்லது எழுதியவர் என்பதை ஏறறுக்கொள்ளுகின்றனர்.

உலகம் உருவான நாள் முதல் சுமார் கி.மு. 1800 ஆண்டுவரையுள்ள சம்பவங்களை ஆதியாகமம் தெரிவிக்கின்றது.

வரலாற்றுச் சம்பவங்களின் அடிப்படையில் மோசேயின் காலம் ஏறத்தாழ சரியாக கூறமுடியும். 1இராஜாக்களின் புத்தகத்தில் (6:1) சாலமோன் அரசாணட் 4ம் வருடம், அதாவது இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டுச் 480 வது வருடம் எருசலேம் தேவாலயக் கட்டடப்பணி ஆரம்பமானது. சாலமோன் நாலாவது ஆட்சி ஆண்டு சுமார் கிமு. 966. எனவே 1446 வது ஆண்டு மோசே வழிநடத்துதல் பணியை மேற்கொண்டார். இப்புத்தகத்தை மோசே எழுதியிருப்பாரானால் 40 வருட வனாந்திர வாழ்க்கையின் கடைசியில் இந்நூலை எழுதியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பின்னணி

ஆதியாகமம் 1-38 அதிகாரங்களில் காணப்படும் நாகரீகம், படைப்பு, வம்சவரலாறு, ஜலப்பிரளயம், புவியியல், மக்களின்யாத்திரை, ஆடுமேய்த்தல், நிலம் சம்மந்தமான காரியங்கள் ஆகியவை மெசபடோமிய வாழ்க்கைக்கு மிக ஒத்துக் காணபப்டுகிறது. இவுற்றில் நடைபெற்ற பெரும்பான்மையான சம்பவங்கள் மெசபட்டோமியாவில் நடைபெறறதாகவே காணபப்டுகிறது. ஆசிரியர் மனிதனின் முதல்வீடான ஏதென் தோட்டத்தை இபப்குதியாகவே காண்பிக்கிறார் ,பாபேல் கோபுரம் கட்டப்பட்டதும், ஆபிரகாம் பிறந்த இடம், ஈசாக்குக் பெண் கொண்டது, யாக்கோபு 20 வருடங்களாக வாழ்ந்தது ஆகியவை இப்பகுதியை மையமாகக் கொண்டது.

39–50 அதிகாரங்கள் எகிப்திய பாரம்பரியத்தை விளக்கக்கூடியதாக அமைகிறது.

நோக்கம் – செய்தியும்

ஆதியாகமம் படைப்பின் முழு விபரத்தையும் தெளிவாக்குகிறது. தேவன் படைப்பின் காரணராகவும், படைப்பின் சிகரமாக மனிதனை தன்னுடைய சாயலின்படி படைத்ததையும், அவர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்தது உலகை ஆசீர்வதத்தையும் தெரிவிக்கிறது. முதல் படைப்பான ஆதாமம் ஏவாள் எனப்வர்கள் கீழ்படியாமல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து அதற்கு தண்டனையாக சாபத்தை பெற்றுக்கொண்டதையும் விளக்குகிறது. ஏனினும் இறைவனை செயலாற்று கிறவராகவே சித்தரிக்கிறது. இருட்சிப்பின் ஆரம்பமாக இறைவன் ஒரு நபரை, குடம்பத்தை வம்சத்தை தெரிந்து கொண்டு, உலகத்திற்கு ஆசீராவாதத்தை கொடுக்க விரும்புவதை தெரிவிக்கிறது. பல கடவுள் வணக்கதிற்கு வழிதவறிய மக்கள் ஒரு கடவுள் வணக்கத்திற்கு நேராக வழிநடத்தியதை விவரிக்கிறது. ஆதியாகமத்தில் தொடக்கங்கள்

1. ஆதியாகமம் 1:1–25 உலகத்தின் தொடக்கம்
2. ஆதியாகமம் 1:26–2:25 மனித குலத்தின் தொடக்கம்
3. ஆதியாகமம் 3:1–7 பாவத்தின் தொடக்கம்
4. ஆதியாகமம் 3:8–24 இரட்சிப்பு உறுதிமொழியின் தொடக்கம்
5. ஆதியாகமம் 4:1–15 குடும்ப வாழ்வின் தொடக்கம்
6. ஆதியாகமம் 4:16–9:29 மனிதன் உண்டாக்கிய நாகாகீத்தின் தொடக்கம்
7. ஆதியாகமம் 10–11 உலக நாடுகளின் தொடக்கம்
8. ஆதியாகமம் 12–50 எபிரேய மக்களின் தொடக்கம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

# 2016 – ஏப்ரல் மாத விடைகள்

1. அந்தப்படி, இளைஞரே, .......பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ( 1 பேதுரு 5:5)
2. கர்த்தர் ( யூதா 1:15)
3. (யோவான் 15: 17 , 21)
4. ( 1 பேதுரு 1 : 17)
5. (1 யோவான் 7 : 8)
6. ( 1 பேதுரு 3 : 9 )
7. (3 யோவான் 12)
8. ((1 யோவான் 3 : 14))
9. (3 யோவான் 11)
10. (1 யோவான் 4 : 20)
11. ( 1 பேதுரு 2 : 9 )
12. (2 யோவான் 6)
13. ( 1 பேதுரு 2 : 8 )
14. ( 1 பேதுரு 1 : 9 )
15. (1 யோவான் 2:9)

## 2016 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Selvi . ஜெஸ்வினி இயேசுதாஸ்
Sis. ஆனந்தி
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. பிரிஸ்கில்லா செங்குட்டுவன்
Sis. செலின் டேவிட்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஜோன் அசோக்குமார்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. ஜெபராஜ்
Bro. கிறிஸ்டோபர். M

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ...... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
செல்வி. சித்ரா ராஜன்
செல்வி. பியூலா ஜெயக்குமார்
செல்வி. சுஸ்மிதா செல்வதாஸ்
செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
செல்வி. மீனா குமாரி சுகமார்
செல்வி. தெபோரா ஆமோஸ்

செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
செல்வன். ஜோ நிர்மல் டென்சிங்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வன். கதிரவன் சுகுமார்

Sis. சித்ரா மேரி சாம்சன்
Sis.. மரிய குளோரி தாஸ்
Sis.. ஆனந்தி சாலொமோன்
Sis.. சஜின் ஜீவா /பிரான்கிளின்

Sis.. எலிசபெத் ஸ்டாலின்
Sis.. ஜெயா கொம்மையன்
Sis.. அகிலா ராஜா செல்வன்
Sis.. ஜெகதாம்பாள் ராஜவேல்
Sis.. குமுதினி வில்சன்
Sis.. சுகந்தி தம்புகமார்
Sis.. சவரியம்மா அந்தோனிசாமி
Sis.. ஜோண்ஸ் செல்வசிங்
Sis.. ஜஸ்டின் சுந்தரராஜ்
Sis.. ஏபெநேசர்
Sis.. கலியமூர்த்தி
Sis. தர்மர்

சகோ. டேனியல் மாணிக்கம்
சகோ. கொம்மையன்
சகோ. ஸ்டீபன். வு
சகோ. ராஜவேல்
சகோ. சாமுவேல் ஐசக்
சகோ. ஆசீர்வாதம்

...பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். ———-(ஆதி – 12:3)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி / திரு. ஏபெநேசர் ——— திருமதி / திரு. ஸ்டாலின்
தருமதி / திரு. வில்சன். M ——— திருமதி / திரு. எட்வின் சாம்
தருமதி / திரு. கிரன் குமார் ——— திருமதி / திரு. அந்தோனிசாமி
திருமதி / திரு. தாமஸ் ——— திருமதி / திரு.ஆல்ப்ஸ்ஜேம்ஸ
திருமதி / திரு. கொம்மையன் ——— திருமதி / திரு. ஜாண் மில்லர்
திருமதி / திரு. ஆல்பர்ட். S ———திருமதி / திரு.ஜாண்போஸ்கோ
திருமதி / திரு. பிரேம்குமார் ——— திருமதி / திரு. பால் பாண்டியராஜ்
திருமதி / திரு. ஜெயசேகர் ——— திருமதி / திரு. மனோகரன். P

# 2016 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/05/2016 | சகோ. ஜெயசேகர் | சுகோ.ஐசக்துரை |
| 08/05/2016 | சகோ. ஐசக்துரை | சுகோ.சுகுமார் |
| 15/05/2016 | சகோ. கிறிஸ்டோபர் | சுகோ.ஜெயசேகர் |
| 22/05/2016 | சுகோ.ஆரோக்கிதாஸ் | சகோ. சுகுமார் |
| 29/05/2016 | சுகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. ஆரோக்கிதாஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/05/2016 | சகோ. டேவிட் குமார் | சகோ. கிறிஸ்டோபர் |
| 13/05/2016 | தாய்மார்கள் தின ஆராதனை | |
| 20/05/2016 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/05/2016 | சகோ. வில்ஸன் | சகோ. சாமுவேல் தாசையா |

*சகோதரிகள் ஐக்கிய கூடுகை* மாலை 6 மணியளவில் (நாள் பின்னர் அறிவிக்கப்படும்)

இடம் – பாஹீலில் உள்ள சபியன் ஜெப வீடு (Prayer house)

12/05/2016 அன்று இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

*முழு இரவு ஜெபம்* – இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் , அஹமதி

27/05/2016 அன்று *வாலிப ஐக்கிய கூடுகை*

நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

இடம் –பாஹீலில் உள்ள சபியன் ஜெப வீடு (Prayer house)

20/05/2016 *பொது மன்ற கூட்டம்* மாலை 6:30 மணிக்கு

இடம்– பாஹீலில் உள்ள சபியன் ஜெப வீடு (Prayer house)

# 2016 மே மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. சிவந்த மேனியும் அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தவன் யார்?
2. மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்த பெண் யார்?
3. மனக்கிலேசத்தோடு ஜெபித்த பெண் யார்?
4. ராஜாவோடு ஏன் என்னை மோசம் போக்கினீர்கள் என்ற ஸ்திரி யார்?
5. சுரமண்டலத்தை வாசித்து பொல்லாத ஆவியை துரத்தினவன் யார்?
6. காணாமல் போனதை தேடிப்போனவன் அடைந்ததென்ன?
7. சவுலின் விரோதியானவன் 'அவன் மகா தந்திரவாதி' அவன் யார் ?
8. மரணத்திற்கும்எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது என்றது யார்?
9. தன் ஈட்டியினால் தானே குத்துண்டு செத்தவன் யார்?
10. பிடரி முறிந்து செத்து போனவன் யார்?
11. ஒரு ராஜாவும் அவனுடைய பிள்ளைகளும் ஒருமிக்க செத்தார்கள் அவர்கள் யார்?
12. ஒரு மனைவி கிடைக்க 200 பேரை கொண்றவன் யார்? மனைவியினிமித்தம் 30 பேரை கொன்றவர் யார்?
13. மரணத்தின் கசப்பு அற்றுபோனது நிச்சயம் என்று சொன்னவன் யார்?
14. தகப்பனும் தாத்தாவும் மரித்தபோது பிறந்த குழந்தை எது?
15. தன் ராஜா செத்து போனதை கண்ட போது பட்டயத்தின் மேல் விழுந்து அவனோடே கூட செத்துபோன ஆயுததாரி யார் ?

விடைகளை வருகின்ற 20/05/2016 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ் ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். குறிப்பு : வேதத்தில் .. I சாமுவேல் புத்தகத்தில் பதிலை தேடுங்கள்:

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –**

மத்தேயு 7:7

# கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகக்கடவோம்
(Being ready for the coming of Christ )

## உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தில் உண்மையுள்ளவராய் இருங்கள்! (மத்தேயு 25:14-30)

அந்தரங்க ஜீவியத்தில் ஆயத்தமாயிருக்கும்படி பத்து கன்னிகைகளின் உவமையை கூறி முடித்தபின் இயேசு இந்த இரண்டாவது உவமையை கூறினார். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்த தாலந்துகளை உண்மையோடு உபயோகிக்க வேண்டும் என வலியுறுத்தவே இந்த இரண்டாவது உவமையை இயேசு கூறினார். இந்த தாலந்துகள் யாதெனில் : நமக்கு சொந்தமான உடமைகள், பணம், சுபாவமான திறமை, வாழ்க்கையில் கிடைக்கும் சந்தர்பங்கள் நேரங்கள் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் ...... போனற்வைகளேயாகும். நூம் எல்லோரும் தாலந்துகளை ஒரே சமமாய் பெற்றிறுக்கவில்லை, எப்படியெனில் இந்த உவமையில் ஒருவன் ஐந்து தாலந்துகளையும் மற்றொருவன் இரண்டு தாலந்துகளையும் வேறொறுவன் ஒரு தாலந்தையும் உடையவர்களாய் இருந்தனர். இருப்பினும் வித்தியாசமான அளவில் தாலந்துகளை பெற்ற இவர்கள், கிடைக்கும் சந்தர்ப்பத்தை உபயோகிப்பதில் சரிசமமான நிலையிலே இருந்தனர் எவரிடம் அதிகம் கொடுக்கபட்டதோ, அவரிடம் மாத்திரமே அதிகம் கேட்கப்பட்டது, எனவேதான் தன்னுடைய இரண்டு தாலந்தை நான்காக பெருக்கியவன் ஐந்து தாலந்துகளை பத்தாக பெருக்கிக் கொண்ட மனிதன் பெற்ற அதே பலனைப்பெற்றான். காரியம் இவ்வாறாக இருந்ததின் நிமித்தமே ஒரு தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தவன் மீது ஆக்கினை தீர்ப்பு வந்தது. (வசனம் 18) இவன் தன்னுடைய தாலந்தை தேவனுக்காக உபயோகிக்காமல் 'நிலத்தில்' அதாவது இப்பூமிக்குரியவைகளாகவே செலவழித்தான். நம்மில் ஒருவர்கூட 'தேவன் எனக்கு ஒரு தாலந்தையும் தரவில்லை!' என கூறவே முடியாது ஏனெனில் நாம் எல்லோருமே தேவனிடத்திலிருந்த ஏதாகிலும் சில தாலந்துகளை பெற்றிருக்கதான் செய்கிறோம். இப்பொழுது நம்மை அண்டிவரும் கேளவியெல்லாம் இந்த தாலந்துகளை நாம் எதற்கு உபயோகபடுத்தப் போகிறோம்? என்பதுதான். நூம் நமக்கென இவ்வுலகத்தில் உபயோகிப்பது, பூமியில் தாலந்தை புதைத்து வைப்பதற்கு ஒப்பாகும். தேவனுடைய மகிமைக்கென உபயோகபடுத்தப்பட்ட தாலந்துகள் மாத்திரமே நித்தியத்தில் ஆதாயமாக கணக்கிடப்படும். இந்த தரத்தின்படி சீர்தூக்கி பார்க்கும்போது இன்றைக்கு அநேக விசுவாசிகள் மகா தரித்திரத்தில் இருப்பதையே காண்கிறோம், எல்லாம் தேவனுக்கே எனக்கென்று எதுவும் வேண்டாம் என்பதே நம் வாழ்வின் லட்சியமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் வருகைக்கு நீங்கள் ஆயத்தத்துடன் இருக்கிறீர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. நமக்குண்டான யாரையும் வெறுக்காத பட்சத்தில் நாம் ஒரு போதும் இயேசுவின் சீஷனாய் இருந்திடவே முடியாது. ஒருவன் தேவன் தனக்கு தந்த எல்லா உடமைகளையும் தாலந்துகளையும் ஆண்டவருக்காகவே உபயோகிக்காமல் இருந்து கொண்டு நானும் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாய்தான் இருக்கிறேன்!' என கூறுவானென்றால் அவனும் தன்னைதானே ஏமாற்றிக் கொண்டவனேயாவான்.

# ஏமியின் கருணை

ஏமியும் அவள் அம்மாவும் சிற்றுண்டிச் சாலையில் அமர்ந்திருந்தார்கள். வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. மழையோடு வாடைக் காற்றும் சேர்ந்து கொள்ள குளிர் கடுமையாக இருந்தது. சிற்றுண்டிச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அலமாரியில் பரிமாறுவதற்கான பீங்கான் தட்டுகளில் பலகாரங்கள், கேக்குகள் என விதவிதமாக இருந்தன. ஏமி என்ன சாப்பிடுகிறாய்? என அம்மா கேட்டார்கள். மம்மி! எனக்கு அந்த கிரீம் கேக் வேண்டும் என்றாள். அவளுக்கு உடனே பரிமாறப்பட்டது. வெளியே அதிகமான மழை கொட்ட ஆரம்பித்தது. மழையை வேடிக்கை பார்க்க வெளியே எட்டிப்பார்த்த ஏமி அதிர்ச்சியான காட்சியைக் கண்டாள். அவளது வயதையொத்த சிறுமி கடைக்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தாள். கிழிந்து தொங்கும் ஆடை, செருப்பு இல்லாத கால்கள், எனப் பார்ப்பதற்கே பரிதாபமான அச்சிறுமி காட்சியளித்தாள். மழையில் நினைந்ததால் அவளின் உடல் நடுங்கி கொண்டிருந்தது. பசியின் அகோரத்தில் இருப்பதை அவள் முகம் காட்டிக்கொடுத்தது. அவள் கண்கள் பலகார அலமாரியை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தன. இதனை கண்ட ஏமியின் உள்ளம் காயப்பட்டு கனத்தது. மௌனமாகவே தன் தாயோடு வீடு வந்து சேர்ந்தாள். குளிர் அடுப்பருகே உட்கார்ந்திருந்த ஏமி திடீரென எழுந்தாள். ஒரு பென்சிலை தேடி கண்டுபிடித்து “நான் வளர்ந்து என் கையில் பணம் வரும்பொழுது உன்னைப் போன்ற ஏழை சிறுமிகளுக்காக அழகிய இன்பமான வீடொன்றைக் கட்டுவேன்” என்று ஒரு துண்டு தாளில் எழுதினாள்.

ஏமியின் கரிசனை இப்படி காகிதத்தில் எழுதி மனதோடு முடிந்து போனதா? இல்லைவே இல்லை, இந்த ஒரு காரணத்திற்காகவே தான் நம்நாட்டிற்கு வந்து கஷ்டத்தில் வாழும் பிள்ளைகள், அநாதைக் குழந்தைகளுக்காக டோனாவூரில்குழந்தைகள் சரணாலயம் ஒன்றை அமைத்து வேலை செய்தாள். இதை வாசிக்கின்ற அன்பு உள்ளங்களே நம் தேசத்தில் கோடிக்கணக்கான அநாதைக் குழந்தைகள் பெற்றோர்களை இழந்து உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் மரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களுக்காக என்ன செய்கிறோம். நம்முடைய கரிசனைதான் என்ன?

“ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்” அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி–19:17

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதரர். ஆல்பர்ட்

## டாக்டர் பால் பிராண்ட் (1914–2003)

தொழுநோயால் பாதிக்கப்பட்டவரின் கை கால்களை உயிரடையச் செய்யமுடியுமா? என்ற மிகப் பெரிய கேள்விக்குத் தனது கடின ஆராய்ச்சியின் மூலம் தொழுநோயால் கை, கால்களை அங்கவீனமாகுதலின் காரணம், அதனைத் தடுக்க வழியைக் கண்டுபிடித்தவர் டாக்டர் பால் பிராண்ட். இவர் ஈவ்லின் பிராண்ட்டின் மூத்த மகன், எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணரான இவர் தமிழ்நாட்டில், வேலூர் கொல்லி மலைப் பகுதிகளில் கண் குருடாகி, கை கால்கள் அழுகி, முடமான தொழு நோயாளிகளின் மீது அதிகக் கரிசனை உடையவர். இவர்களது மறுவாழ்விற்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்து இறுதிவரை உழைத்தவர்.

ஜெசிமன் பிராண்ட்–ஈவ்லின் தம்பதியரின் முதல் மகனாக 1914–ம் ஆண்டு ஜீலை மாதம் 8–ம் தேதி தமிழ் நாட்டில் பிறந்தார். தந்தையும் தாயும் மிஷனெரிப்பணி செய்து வந்ததால், தங்கையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு. அநேக நேரங்களில் இவருக்கு கொடுக்கப்பட்டது. தனது தங்கையுடன் இருண்ட மலைப் பகுதியில் தங்களது மரவீட்டில் தனியாக இருக்கும்போது, தனது தாய் நீ ஒருநாளும் தனியாக இல்லை. தேவன் உன்னோடு கூட இருந்து உன்னைக் கவனித்துக் காப்பாற்றுகிறார் என்ற வார்த்தைகள் பால் பிராண்டுக்கு தைரியத்தை தந்தது. இவரது தாயே இவருக்கு முதல் ஆசிரியர். கணிதம், ஆங்கிலப் பாடங்களைத் தனது தாயாரிடமே இயற்கை சூழ்நிலைகள் நிறைந்த கொல்லிமலைபகுதி மரங்களின் அடியில் அமர்ந்து கற்க ஆரம்பித்தார். பால் பிராண்டின் தகப்பனார் ஜெசிமன் பிராண்ட் கொல்லிமலைவாழ் மக்களுக்கு மிஷனெரியாக, போதகராக, மருத்துவராக, வழக்குகள் தீர்த்து வைப்பவராகவும், வீடு கட்டுதல் மற்றும் தச்சு வேலை, நிலங்களில் பயிரிடுதல் போன்ற நுணுக்கங்களைச் சொல்லித் தருதல் என்று பலவேலைகளை செய்து வந்தாலும், தனது பிள்ளைகளுடன் நேரம் செலவிடுதல் கவனமாக இருப்பார். ஒருமுறை மலைபோல் வளர்ந்திருந்த கறையான் புற்றை உடைத்து, அதில் அவைகள் எப்படி எல்லாம் வாழ்கின்றன என்று தனக்கும் தனது தங்கை கோனிக்கும் அவர் காண்பித்தது மறக்கமுடியாது என்கிறார் பால் பிராண்ட். தனது பெற்றோரின் மிஷனெரிப பணிகளைச் சிறுவயதிலே கவனித்து வந்த பால் தன் தந்தையின் தெருப் பிரசங்கங்களை கேட்டும் கைப்பிரதிகள் விநியோகம் செய்யும்போது தானும் தனது கையால் மற்றவர்களுக்குக் கொடுத்தும் உள்ளார். குடும் ஜெபங்களில் தனது பெற்றோர் ஊழியங்களுக்காக பாரத்துடன் ஜெபிப்பதைக் கேட்டு தானும் ஜெபித்துள்ளார். மிஷனெரிப் பணியிலே வளர்க்கப்பட்டதால்பால் பிராண்ட் பிற்காலத்தில் தொழுநோயாளிகளுக்கு மிஷனெரியாக தனது வாழ்வை அர்ப்பணிக்க வழிவகுத்தது. பால் லண்டனில் தனது உறவினர் வீட்டில தங்கி படித்தபோது இவரது பாட்டி இவருக்குக் கிறிஸ்துவைப் பற்றியும்வேதாகம கதைகளையும் கற்றுக்கொடுத்து கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்கள். வேதக்கதைகளைக் கேட்கும்போது இயேசு கிறிஸ்து குஷ்டரோகிகளை நேசித்ததும் அவர்களைத் தொட்டு சுகமாக்கினதும் இவரது இதயத்தில் அழியாமல் இருந்தன. தேவனது அநாதி தீர்மானத்தின்படி பால்

பிராண்ட லண்டன் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் படிப்பு முடித்து ராயல் கல்லூரியில் அறுவை சிகிச்சை முதுகலைப்படிப்பையும் பயின்றார். ஆனாலும் தான் பயின்ற தச்சு வேலை கட்டிட கலை ஆகியவை வீணாகவில்லை. பிற்காலத்தில் தொழுநோயாளிகளின் மறுவாழ்விற்காக தங்கள் கைகளைக் வாயப்படுத்திக்கொள்ளாமல் கட்டிட வேலையையும், தச்சு வேலையையும் எப்படிச் செய்யலாம் என்று சொல்லிக்கொடுக்கத்தான் படித்த படிப்பு உதவியாக இருந்தது என்று எழுதுகிறார்.

பால் தம்பதியினர் தமிழ்நாட்டில் தொழுநோயாளிகள், பிச்சைக்காரர்களைப் பார்த்து, கை, கால் அழுகி, கண் குருடராகி எந்த வேலையும் செய்ய இயலாமல், குறுகிய நாட்கள் பிச்சை எடுத்து வாழ்ந்து மடியும் ஒரு கூட்ட மக்கள்மேல் பாரங்கொண்டு, இவர்களின் துயர் துடைக்க தங்களையே ஊழியத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டனர். 1946-ம் ஆண்டு தனது மனைவி மார்கிரெட்டுடன் இந்தியா வந்த பால் வேலூர் கிறிஸ்தவ மருத்துவ கல்லூரியில் அறுவை சிகிச்சை பாடப்பிரிவைப் போதிக்க ஆரம்பித்தார். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது காயப்பட்ட கை, கால்கயையுடைய போர் வீரர்களுக்குச் சிகிச்சையளித்த தனது அனுபவத்தைக் கொண்டும் ஒரு கடினமான ஆராய்ச்சியை மேற்கொண்டார். தமிழ்நாட்டில் இவர் மேற்கொண்ட இந்த ஆராய்ச்சி, உலகத்திலுள்ள தொழுநோயாளிகளின் சிகிச்சையில் ஒரு உன்னத முன்னேற்றத்தை கொணர்ந்தது. தொழுநோயாளியின் கிருமிகளால் கை கால்களின் நரம்புகள் பாதிக்கப்படுகிறது, இதனால் தொழுநோயாளிகள், காயம் ஏற்படும்போது உண்டாகும் வலியை இழக்கின்றனர்.வலிக்கிறது என்ற எச்சரிப்பு மூளைக்கு கொடுக்ககப்பட முடியாததால் அங்கங்கள் நெருப்பு காயப்படுதல் போன்றவற்றால் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு அழிகின்றன என்பதை முன்னோடியாக கண்டுபித்தார். மனிதனுக்கு வலி என்பது தேவனால் கொடுக்கப்பட்ட பரிசு. இந்த உன்னத பரிசை தொழு நோயயாளிகள் இழக்கின்றனர். திறமை மிக்க அவரது அறுவைச் சிகிச்சையால் அங்கங்களைப் புனரமைப்புக்கு அறுவை சிகிச்சை செய்து சரிப்படுத்தும் வழிகளைக் கண்டுபிடித்தார். 1953-ல் தொழுநோய் மிஷன் என்ற இயக்கத்தில் அணைந்து வேலூருக்கு அருகில் கரிகிரியலுள்ள ளுடுசுவுஊ என்ற மருத்துவமனையை ஆரம்பித்து, தொடர்ந்து தொழுநோயைப் பற்றியும் அந்நோயாளிகளுக்கு தர வேண்டிய பயிற்சிகளையும் ஆராய்ச்சி செய்தார். தனது 17 வருட இந்திய ஊழியங்களுக்கு பிறகு 1964-ல் உலகளாவிய லெப்ரசி மிஷனின் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அமெரிக்காவில் லூசியானாவிலுளய்ள தொழுநோய் மருத்துவமனையில் பணிபுரிந்தார். ஆழமான விசுவாசமும் மற்றவர்கள்மேல் கரிசனையுள்ள அர்ப்பணிப்புகொண்ட பால் பிராண்ட் ஒரு உயர்ந்த மனிதர். அதிக தாழ்மையாக நடந்துகொண்ட இவர் இந்த உலக சரித்திரம் மறக்கமுடியாத பெரிய சாதனைகளைப்படைத்தார். 2003-ம் ஆண்டு தனது 89 வயதில் வாஷிங்டனில் மரித்தார். (தொகுப்பு)

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரர் . சுகுமார்

## சகோதரிகள் பகுதி

# மனந்திரும்புங்கள்

கர்த்தருக்கு பிரியமான சகோதரிகளே உங்களுக்கு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துகொள்கிறேன்.

இப்பொழுது நாம் உடனடியாக செய்ய வேண்டிய காரியத்தை கர்த்தர் சொல்லுகிறார் (அப் 17:30)ல். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷ ரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். என்று வாசிக்கிறோம்.

மனிதன்இறைவனோடு கொள்ளகூடிய நெருக்கமான ஆன்மீக உறவின் முதற்படிதான் மனம் திரும்புதல். தவறான பாதையில் செல்பவர்கள் மாத்திரம் மனம் திரும்பவேண்டுமென்று அல்ல.நல்லவர்களாக வாழ்பவர்களும் மனம் திரும்ப வேண்டும் அதற்கு காரணம் மனிதர் எல்லாருமே ஆண்டவருடைய பார்வையில் அவருடைய எதிர்பார்பின்படி வாழ தவறியிருப்பதால் எல்லாருமே மனம் திரும்ப வேண்டும் என்பது அவசியம். ஒருவன் தனக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூ உலகத்திற்கு வந்ததையும் அவர் கோர சிலுவையில் நம்முடைய பாவத்திற்காக பரிகாரியாக அவன் ஜீவனை விட்டு அவர் வந்த நோக்கத்தை முடித்து மீண்டும் உயிர்த்தெழுந்து பரலேகாம் சென்றதை நாம் இந்த சரீர கண்களில் காண முடியாவிட்டாலும் அதை குறித்து வேதவசனம் கூறுவதை விசுவாசித்ததின் காரணமாக நமக்கு மனமாற்றம் என்ற மனந்திரும்புதல் வருகிறது.

மனந்திரும்புகிறவன் முதலில் நான் ஒரு பாவி என்று உணர்ந்து ஒத்துக்கொண்டு தேவனிடத்தில் நமக்குள் இருக்கும் தேவன் விரும்பாத காரியங்களை அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும். ஆந்த பழக்க வழக்கங்களில் இருந்து விடுபடுதலும் அந்த சூழ்நிலைகளில் இருந்து விலகி நிற்பதும் அவசியமாக காணப்படுகின்றது. ஏனெனில் வேதம் கூறுகிறது ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாக இருக்கிறான் பழையன முழுவதும் ஒழிந்து போயின என்று கூறுகிறது.

மனதிரும்புதல் நமக்கு என்ன பலன் கிடைக்கிறது பார்த்தால் மனந்திரும்புதலே தேவன் அருளும் கிருபையினால்தான் நடைபெறுகிறது. மனந்திரும்பும்போதுதான் மனிதனுக்கு தேவனோடு தனிபட்ட நேரடியான

உறவு ஏற்படுகிறது. அடுத்தபடியாக மனந்திரும்புகிறவர்களுடைய பாவத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் கழுவி சுதிதிகரிப்பதினால் பாவ மன்னிப்பின் நிச்சயம் கிடைக்கிறது. தேவன் பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல பரிசுத்தத்திற்கேதுவான மாற்றத்தை மனிதனுக்குள் ஏற்படுத்துகிறார். இந்த புதிய தன்மையின் காரணமாக மனந்திரும்புகிறவர்களுக்கு பரிசுத்தமாக வாழ பெலன் கிடைக்கிறது. மேலும் மனந்திரும்புகிறவர்களுக்கு உண்மையான சந்தோஷமும் நியைான சமாதானமும் கிடைக்கிறது.

ஒவ்வொருவரையும் இயேசு மனந்திரும்புகள் என்று அழைக்கிறார். மனந்திருப்புங்கள் இன்றே இரட்சன்ய நாள்

கர்த்தர் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக .

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி.

**பத்மினி வர்கீஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பான செய்தி மலர் வாசக சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் கடந்த 2 வருடங்களாக இந்த செய்தி மலர் ஊழியத்தை நடத்த தேவன் செய்ய பெரிய உபகாரங்க்ளுகக்காக தேவனுக்கும் இந்த காரியத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைத்து செய்திமலர் வாசகர்களுக்கும் இதை உருவாக்க ஒவ்வொரு மாதமும் எனக்கு உறுதுணையாய் இருந்த சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் ,குறைகளை குற்றங்கள் அநேகம் உண்டு, ஆனாலும் பொருத்துக் கொண்ட அன்பு உள்ளங்களுக்கு மீண்டும் ஒரு முறை கூட என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு இரண்டு வருடங்களிலும் எந்த ஒரு அதிருப்பியும் இன்றி அனுமதி அளித்த சபையின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதை பற்றி ஒன்றும் தெரியாத நேரத்தில் இதற்கு உறுதுணையாய் இருந்த அன்பு சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் சபையின் குடும்பம் மற்றும் தனி நபர் ஒவ்வொருவருக்கும் என் நன்றியை இயேசுவின் நாமத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்

இங்ஙனம் கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரன். ஐசக்துரை

# கடந்த மாதசபையின் அறுப்பின் பண்டிகை நிகழ்வுகளில் தங்களின் பார்வைக்கு சில













## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்


**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**

23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**

99870126

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


**தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**


Private Circulation only